# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 130/2021**

**( Evidence recorded Under Sec 299 Crpc)**

**Deposition of Witness for Prosecution : PW1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | CC - 130/2021 | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : | ஜெயக்குமார் | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | பெரியகருப்பன் | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent petition filed and allowed )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.01.2026

---

**முதல் விசாரணை**

நான் வெள்ளைமலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 14.03.2021ம் தேதி காலை 6.30 மணியளவில் சின்னசெம்மேட்டுபட்டி அருகே லட்சுமணன் தோட்டம் அருகே நானும் எனது தம்பி பிரேம் குமாரும் தோட்டத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு முன்பு சென்று கொண்டிருந்த அபிஷேக் என்பவரும் ராஜ்குமார் என்பவரும் TVS Star city இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது எதிரே வேகமாக TN 84 Y32 20 என்ற Mahendira Maxi Cab என்ற வாகனம் வந்து மேற்படி எனக்கு முன்னால் சென்ற இருவர் மீது மோதி தூக்கி வீசியது அதில் ராஜ்குமாருக்கு தலையிலும் நெஞ்சிலும், காலிலும் அடிப்பட்டிருந்தது. அபிஷேக்கு நெஞ்சில் அடிப்பட்டு, காதில் இருந்து ரத்தம் வழிந்தது. அவர்கள் வீட்டிற்கு நாங்கள் தகவல் சொன்னோம்.

பின்னர் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் பரிசோதித்த மருத்துவர் இருவரும் இறந்துவிட்டதாக சொன்னார்கள். இதுசம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை**

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. CC - 130/2021**

**( Evidence recorded Under Sec 299 Crpc)**

**Deposition of Witness for Prosecution : PW2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | CC - 130/2021 | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : பிரேம் குமார் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : மாயாண்டி | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent petition filed and allowed )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.01.2026

---

**முதல் விசாரணை**

நான் வெள்ளைமலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். கடந்த 14.03.2021ம் தேதி காலை 6.30 மணியளவில் சின்னசெம்மேட்டுபட்டி அருகே லட்சுமணன் தோட்டம் அருகே நானும் எனது அண்ணன் ஜெயக்குமாரும் தோட்டத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது விபத்து நடந்தது. அப்போது அபிஷேக் என்பவரும் ராஜ்குமார் என்பவரும் Star city இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது எதிரே வேகமாக TN 84 Y32 20 என்ற Mahendira Maxi Cab என்ற வாகனம் வந்து மேற்படி எனக்கு முன்னால் சென்ற இருவர் மீது மோதி தூக்கி வீசியது அதில் இருவருக்கும் தலையிலும் நெஞ்சிலும், காலிலும் அடிப்பட்டு இருவருக்கும் காதில் இருந்து ரத்தம் வழிந்தது. அவர்கள் வீட்டிற்கு நாங்கள் தகவல் சொன்னோம். பின்னர் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி

உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் பரிசோதித்த மருத்துவர் இருவரும் இறந்துவிட்டதாக சொன்னார்கள். இதுசம்பந்தமாக எனது அண்ணன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**